# UNIT 2
# LESSON 2

# சொற்களஞ்சியம்

# கணினிக்கூடம்



- மாணவர்கள் கணினிக்கூடத்தில் கணினிப்பாடம் படிக்கிறார்கள்.

- கணினிக்கூடத்தில் மாணவர்கள் கணினியில் வேலை செய்கிறார்கள்.

# ஆய்வுக்கூடம்



- ஆய்வுக்கூடத்தில் மாணவர்கள் பல வகையான ஆய்வுகளைச் செய்கிறார்கள்.

- அறிவியல் படிக்கின்ற மாணவர்கள் ஆய்வுக்கூடத்தில் வேலை செய்கிறார்கள்.

# நூலகம்



- நூலகத்தில் மாணவர்கள் கதை நூல்களைப் படிக்கிறார்கள்.

- நூலகத்தில் பல வகையான நூல்கள் இருக்கின்றன.

# உடற்பயிற்சிக்கூடம்



- உடற்பயிற்சி செய்ய மாணவர்கள் உடற்பயிற்சிக்கூடத்துக்குப் போகிறார்கள்.

- உடற்பயிற்சிக்கூடத்தில் மாணவர்கள் பல விளையாட்டுக்களை விளையாடுகிறார்கள்.

# உணவகம்



- சாப்பாட்டு நேரத்தில் மாணவர்கள் பலர் உணவகத்தில் உணவு வகைகளை வாங்குகிறார்கள்.

- சனிக்கிழமைகளில் மக்கள் பலர் உணவத்துக்குப் போய்ச் சாப்பிடுகிறார்கள்.